## எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் (ஜீஎப்ஏரீஎம்) - மலேரியா 8 ஆவது சுற்றின் கூறு - 2014

எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - மலேரியா சுற்று 8 கூறின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎப்ஏரீஎம்) இடையே 2009 செப்தெம்பர் 17 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்எல்-809-ஜீ10-எம் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் நிறைவேற்றலிற்கும் அமுலாக்கலிற்கும் சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சு பொறுப்பாக உள்ளது. இலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பின்தங்கிய மக்களுக்கு மத்தியில் மலேரியா கட்டுப்பாட்டை தீவிரப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் சுற்று 8 இற்கான தீவிர மலேரியாக் கட்டுப்பாட்டுபாட்டிற்காக ஐ.அ.டொ. 13,059,866 ஆனதுடன் முழுத் தொகையும் உலகளாவிய நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2009 செப்தெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 ஆகஸ்ட் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பின்னர் செயற்திட்ட காலப்பகுதி 2015 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகள் கொண்டுள்ள தகவல்களுடன் உடன்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 7,187,273 தொகையான வேதனங்கள் மனிதவளச் செலவினங்களிற்குப் பதிலாக உட்டகட்டமைப்பு மற்றும் ஏனைய உபகரணங்கள் மீதான செலவினங்களின் கீழ் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 371 (2)(இ) இன் பிரகாரம், பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவிற்கான முற்பணங்கள் குறித்த நோக்கங்கள் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், இது 30 சந்தர்ப்பங்களில் ரூபா 2,256,080 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்வதற்கு 2 முதல் 8 மாதங்கள் வீச்சிலான காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக ரூபா 189,973,912 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்டத்தின் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட பணிப்பாளர் பதவி வெற்றிடமாக இருந்ததுடன் தற்போதைய செயற்திட்ட பணிப்பாளர் 1 ½ ஆண்டுகளால் பதில் கடமை அடிப்படையில் கடமைகளை மேவுகின்றார்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2014 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | 2014 ஆண்டின் போது பயன்படுத்திய தொகை | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் |
| ஜீஎவ்ஏரீஎம் | 13.06 | 1,498 | 1.16 | 151.0 | 1.14 | 148.20 | 10.32 | 1,351.21 |
| இலங்கை அரசாங்கம் | - | - | - | 3.0 | - | - | - | - |
| | 13.06 | 1,498 | 1.16 | 154.0 | 1.14 | 148.20 | 10.32 | 1,351.21 |

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், உலகளாவிய நிதியத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1,498 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.06 மில்லியன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ரூபா 1,351.21 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.32 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதி ஐ.அ.டொலர் 620,000 திறைசேரியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாதிருந்த அநுராதபுரம் மாவட்டத்தில் சிங்கராகமவில் புதிய சுற்றுலா விடுதியொன்றின் நிர்மாணம் சிங்கராகமவில் களஞ்சிய கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தலின் கீழ் செய்யப்பட்ட ரூபா 6,407,768 தொகையான சேமிப்புக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த

(ஆ) செயற்திட்டமானது பாதிக்கப்பட்ட பகுதிகளில் இலக்கிடப்பட்ட குறித்த மக்களிற்கு நோய்பரப்பை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் கீழ் நீடித்து நிற்கும் நோய்தடுப்பு வலை (LLIN) கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 3,685 நீடித்து நிற்கும் நோய்தடுப்பு வலை விநியோகிக்கப்படாமல் சிங்கராகம களஞ்சியக் கட்டிடத்தில் 3 மாதங்களிற்கு மேலாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ii) மாதாந்த மீளாய்வு கூட்ட குறிப்புகளின் பிரகாரம், 79 நீடித்த நோய்தடுப்பு வலை விநியோகிக்கப்படாமல் யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய மலேரியா அலுவலகத்தில் இருந்தது

(இ) செயற்திட்டமானது ரூபா 1,700,000 கிரயத்தில் எவ்ஆர் மென்பொருள் பொதியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2013 யூன் 28 இல் கேள்விகோரலொன்றை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தமானது 2015 மார்ச் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் இணையதளம் ஊடாக மாவட்ட அலுவலகத்திற்கான நுழைவு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 திசெம்பர் 09 இல் ரூபா 4,872,944 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆய்வுகூட உபகரணங்கள் 2012 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் நிர்மாணிக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த பொலிமற்றஸ் தொடர் எதிர்விளைவுகள் ஆய்வுகூடத்தின் நிர்மாணத்திலுள்ள தாமதம் காரணமாக 2015 மார்ச் 31 வரையும் பயனற்று இருந்தது. ஆய்வுகூட உபகரணத்தின் உத்தரவாத காலப்பகுதியும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலாவதியாகி இருந்தது.

(உ) வயம்ப பல்கலைக்கழகத்துடன் மலேரியா கட்டுப்பாட்டு பிரச்சார சபையால் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நுளம்பு ஒழித்தல் கட்டுப்பாடு மீதான நடவடிக்கைகள் 2012 யூன் மாதம் அளவில் பூர்த்திசெய்யப்பட்ட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நடவடிக்கைகள் 2015 மார்ச் வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3. நிதிக் கட்டுப்பாடு

----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான நிதிக் கட்டுப்பாடுகள் திருப்திகரமாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 553,975 பெறுமதியான முற்பணங்கள் குறித்த நோக்கங்கிற்காக பயன்படுத்தாமல் முழுவதும் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தின் நடவடிக்கையில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கொடுக்கல் வாங்கல்கள் செயற்திட்டத்தின் நிதிக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தி செயற்படுத்துவதற்காக உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களில் ரூபா 2,270,487 தொகையான மிகையறவீடுகள் பணம் அனுப்புவதிலுள்ள தாமதங்கள் காரணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) செயற்திட்டத்தின் பாதீட்டு மதிப்பீடு செயற்திட்டத்தின் வினைத்திறனான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் அவதானிப்புகள் குறிக்கின்றது.

(i) 09 நடவடிக்கைகளின் கீழ் மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 17,659,681 கூட்டு மொத்தத் தொகையான முழு ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 13 நடவடிக்கைகளின் கீழ் மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ரூபா 25,777,090 தொகையான மொத்த ஒதுக்கீட்டில் மொத்த ஒதுக்கீட்டின் 14 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,634,038 தொகை மாத்திரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) மேலும், உரிய அதிகாரிகளிடமிருந்து முறையான அனுமதி இல்லாமல் பாதீட்டினை விட மிதமிஞ்சி 17 நடவடிக்கைகளிற்காக ரூபா 12,177,180 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) மேலும், செயற்திட்டத்தின் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காத 03 நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,796,340 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.